# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
## வாராந்தப் பாடசாலை
## வாரம் 02– அலகு 23 வட்டம்

தரம் 08

தயாரிப்பு :- எம்பிலிபிட்டிய கல்வி வலயம்

பெயர் :- ..................

பாடம் :- கணிதம்

கீழே காட்டப்பட்டுள்ள பயிற்சிகளைச் செய்வதற்காக **அலகு 23 வட்டம்** எனும் பாடப்பரப்பின் மீது கவனத்தைச் செலுத்தவும்.

(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகம் பகுதி II இல் பக்கம் 98** இலுள்ள **செயற்பாடு 1** இனைச் செய்துப் பார்க்கவும்.)

1. கீறிட்ட இடங்களை நிரப்புக.
   I. வட்ட அடரொன்றை சமமான இரண்டு பகுதிகளாக மடிக்கும் போது பெறப்படும் சமச்சீர் அச்சு வட்டத்தின் ............... என அழைக்கப்படும்.

   II. வட்டத்தின் மீதுள்ள புள்ளியொன்றையும் வட்டத்தின் மையத்தையும் இணைக்கும் நேர்கோட்டுத் துண்டம் வட்டத்தின் .............. என அழைக்கப்படும்.

(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகம் பகுதி II இல் பக்கம் 99, 100 இலுள்ள செயற்பாடு 2 செயற்பாடு 3** இனைச் செய்துப் பார்க்கவும்.)

2. 5cm ஆரையுள்ள வட்டமொன்றை வரைந்து மையத்தை O எனப் பெயரிடுக..

3. ஆரை 6.5 உ அ ஆகவுள்ள வட்டமொன்றை வரைந்து மையத்தை O எனப் பெயரிடுக.வட்டத்தின் மையத்தினூடாகச் செல்லும் விட்டமொன்றை வரைந்து அதன் நீளத்தை அளந்து எழுதுக.

4. செயற்பாடு 3 இனை அவதானித்து வட்டத்தினையும் வட்டத்திற்கான நாண் ஒன்றையும் வரைந்து சீறிவில், பேரிவில் என்பவற்றைக் குறித்துக் காட்டுக.


5. உமக்கு விருப்பமான அளவைக் கொண்டு வட்டமொன்றை வரைக. அண்ணளவாக சம இடைவெளிகளில் அமையத்தக்கதாக A,B,C,D,E, F எனும் புள்ளிகளை வட்டத்தின் மீது குறிக்க.புள்ளி A இலிருந்து ஏனைய ஒவ்வொரு புள்ளியையும் தனித்தனியே இணைக்க. இதில் நீளம் கூடிய நாணின் பெயரை எழுதுக.அதற்குப் பொருத்தமான பெயரொன்றை குறிப்பிடுக.

6. கீழுள்ள அறிவுருத்தல்களைப் பின்பற்றி செயற்பாட்டனைச் செய்க.


- 8cm ஆரையுள்ள வட்டமொனை தாளொன்றில் வரைந்துக் மையத்தை O எனக் குறித்துக் கொள்க.
- நீர் வரைந்த வட்டத்தில் நாணொன்றை வரைந்துக் கொள்க.
- நீர் வரைந்த வட்ட அடரினை வெட்டி எடுத்துக் கொள்க.
- நாண் வட்டதினை தொடும் புள்ளிகளை ஒன்றோடு ஒன்று பொருத்தி மடிக்க.
- மையத்தையும் மடிப்புக் கோடு நாணைத் தொடும் புள்ளியையும் இணைக்குக.
- உருவாகியுள்ள கோணத்தின் பெறுமானத்தினை அளந்து எழுதுக.

(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகம் பகுதி II இல் பக்கம் 101, 102 இலுள்ள செயற்பாடு 04, செயற்பாடு 05** என்பவற்றைச் செய்துப்பார்க்கவும்.)

7. அருகில் காட்டப்பட்டுள்ள வட்டத்தில் பேரித்துண்டத்தை நிறந்தீட்டிக் காட்டுக.




8. அருகிலுள்ள உருவில் ஆரைச்சிறை POQ ஐ உருவாக்கியுள்ள எல்லைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.




9. உமக்குப் விருப்பமான ஆரையைத் தெரிந்தெடுத்து ஒரே அளவான இரு வட்டங்களை வரைந்து அதில் ஒன்றில் பாகைமானியைப் பயன்படுத்தி ஆரைச்சிறைக் கோணம் $60^0$ ஆகவுள்ள ஆரைச்சிறையொன்றை வெட்டிக் கொள்க. அதனைக் கொண்டு மற்றைய வட்டத்தில் பொருத்திப் பார்ப்பதன் மூலம் ஒரு வட்டத்தில் அவ்வாறான எத்தனை வட்டங்கள் வெட்டலாம் என்பதை உய்த்தறிக.

10. உமது கற்பனைத் திறனைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ள வட்டம் மற்றும் ஆரைச்சிறைகளைக் கொண்டு உருவமொன்றை வரைக.



**குறிப்பு:-**

மேலே தரப்பட்ட பயிற்சிகளைச் செய்து முடித்த பின் உமது பாடப்புத்தகத்திலுள்ள பயிற்சிகளையும் செய்து சக நண்பர்களுடன் கலந்துரையாடி சரி பிழை பார்த்துக் கொள்க.